

நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற மருத்துவ படிப்பிற்கான 54 வது பட்டமளிப்பு விழாவில் 154 மருத்துவர்களுக்கு சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு, மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.அப்துல் வகாப்(பாளை)ரூபி மனோகரன் (நாங்குநேரி)துணை மேயர் ராஜ்,மருத்துவக் கல்லூரி முதல்வர் ரேவதி ஆகியோர் முன்னிலையில் மருத்துவப் படிப்பிற்கான பட்டங்களை வழங்கினார்.



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டசபை தொகுதி உறுப்பினர் அலுவலகத்தில் மின்வாரியத்தில் பணிபு ரிந்து உயிரிழந்த மற்றும் காயமடைந்த மின்வாரிய ஊழியர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்ப டையில் பணி நியமன ஆணைகளை தமிழக சுற் றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் வழங்கினார். இந்நிகழ்வுகளில் மின் வாரிய செயற்பொறியாளர் நடராஜன், வல்லத்தி ராக்கோட்டை உதவி மின் பொறியாளர் பிரகாஷ் திமுக நகர துணைச் செயலாளர் செங்கோல், தகவல் தொழில் நுட்ப அணி வீர செல்வம், ஆசிரியர் வெங் கடேஷ், கிருஷ்ணமூர்த்தி, விஜி, கர்ணா, அரசு வழக் கறிஞர் கண்ணதாசன் உட் பட பலர் கலந்து கொண்ட னர்.

### எஸ்.எஸ்.எல்.சி. - பிளஸ் 2 தேர்வில் மாநிலத்தில் இரண்டாவது இடம் பிடித்த பள்ளி

# தலைமை ஆசிரியர்கள்- பாட ஆசிரியர்கள் - மாணவர்கள் உட்பட 4000 பேருக்கு பாராட்டு!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் சான்றிதழ்களை வழங்கினார்!

சிவகங்கை, ஜூலை 5-

சிவகங்கை மாவட்ட பள்ளி கல்வித்துறை சார்பில் காளையார் கோவில் புனித மைக்கேல் பொறியியல் கல்லூரி வளாகத்தில் 2023-2024 ஆம் கல்வி ஆண்டில் எஸ். எஸ்.எல்.சி. மற்றும் பனிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் 100% தேர்ச்சி பெற்ற பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் மற்றும் பாட ஆசிரியர்கள் மாநிலத்திலேயே,,எஸ்.எஸ். எல்.சி, பிளஸ் 2 அரசு பொதுத்தேர்வில் இரண்டாவது இடம் பெற்றதற்கான மாணவ - மாணவிகளை பாராட்டும்விழா மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் தலைமையில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெற்றது.

மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அ.பாலுமுத்து வரவேற்றுப் பேசினார். நிகழ்ச்சியில் பத்தாம் வகுப்பில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற தலைமையாசிரியர்கள் 149 பேர் 12ஆம் வகுப்பில் 100 சதம் பெற்ற தேர்ச்சி பெற்ற தலைமையாசிரியர்கள் 77 பேர் வினாத்தாள் வடிவமைப்பு குழுவினர் 216பேர், பத்தாம் வகுப்பில் 100% தேர்ச்சி பெற்ற பாட ஆசிரியர்கள் 1774 பேர்,12ம்வகுப்பில் 100% தேர்ச்சி பெற்ற பாட ஆசிரியர்கள் 1781 பேர்,ஆக மொத்தம் 3997 பேர் மற்றும் 10ம் வகுப்பு மற்றும் 12ம்வகுப்பில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகள், காரைக்குடி எஸ். சந்தோஷ், சாலைகிராமம். எம். துர்கா தேவி, எம். காயத்ரி, திருப்புவனம் கே.கவுசல்யா, காரைக்குடி. வி.அட்சயா எம்.கிருத்திகா, பழையனூர் எஸ். சிவதர்ஷணி, தேவகோட்டை ஹெச். எஸ். சாரத பிரியா, காரைக்குடி எஸ்.ருத்ர பாலன், நீட் தேர்வில் முதல் மூன்று இடங்கள் பெற்ற மாணவ-மாணவிகள் அரியக்குடி மு. கார்த்திக், கீழக்கண்டனி. இ .வனிதா, பீற்களைக்காடு ஆ .ரவி ஆக மொத்தம் 15 பேருக்கும், மானாமதுரையைச் சேர்ந்த மாணவி அக்க்ஷயா சென்ற ஆண்டு துணை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து கட்டணம் செலுத்த முடியாமல் கல்லூரி படிப்பில் பாதியை நிறுத்தியதால் அதற்கான கல்வி கட்டணம் ரூ. 2 லட்சத்திற்கான காசோலையினை துவார் சந்திரசேகர். வழங்குதல் மற்றும் ஆசிரியர்களுக்கு பாராட்டு சான்றிதழ். கேடயங்களை வழங்கி கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் பேசியதாவது.

தமிழக முதல்வர் அவர்கள் பதவி ஏற்ற நாள் முதல் அனைத்து அரசு துறைகளும் சிறப்பான வழியில் முன்னேற வேண்டும் என்று விரும்புகிறார். அதற்கான நிதிகளையும் ஒதுக்கி செயல்படுத்தி வருகிறார். இதில் கல்வி, மருத்துவத்திற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து வருகிறார். கல்வியையும் மருத்துவத்தையும் தனது இரண்டு கண்களாக பாவித்து வருகிறார் . இதில் முதல் கண்ணாக கல்வியை பாவித்து வருகிறார். தலைவர் கலைஞர் அவர்கள் ஐந்து முறை முதல்வராக இருந்தபோது கல்விக்காக பல்வேறு நிதிகளை ஒதுக்கி கல்வியின் வளர்ச்சிக்கு அயராது பாடு பாடுபட்டார். அதனால் தான் இன்று தமிழகம் இந்தியாவிலேயே கல்வித் துறையில் வளர்ச்சி பெற்றுள்ளது. உயர்கல்வியில் இந்தியாவிலேயே தமிழகத்தில் 54 சதவீதம் பேர் படித்துள்ளார்கள். இதற்கு காரணம் முதல்வர் கலைஞர் ஆவார். அவர்கள் வழியில் தமிழக முதல்வர் அவர்களும் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார். இந்த ஆண்டு பள்ளிக்கல்வித் துறைக்கும் உயர் கல்வித் துறைக்கும் ரூபாய் 47 ஆயிரம் கோடி நிதியினை ஒதுக்கி உள்ளார். அரசுக்கு பல்வேறு வகையில் நிதி நெருக்கடி இருந்தாலும் கல்வித் துறைக்கு மட்டும் முதல்வர் அவர்கள் தாராளமாக நிதிகளை ஒதுக்கி வருகிறார். கல்வி என்பது அழியா செல்வம் ஆகும். பொக்கிஷமாகும். ஒரு நாடு வளர்ச்சி பெறுவது என்பது கல்வியால் மட்டும்தான் முடியும். பொருளாதார வளர்ச்சி என்பது கல்வியை வைத்து தான் அமைகிறது. எனவே கல்வி என்பது மிகவும் முக்கியமானது. அதிக அளவு கல்வி பெற்ற நாடு தான் வல்லரசாக மாற முடியும். எனவே தமிழகம் கல்வித்துறையில் எவ்வாறு முன்னேறிவருகிறது என்பதை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு வித்திட்டவர்கள் யார் என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். தலைவர் கலைஞர் அவர்களும் அவரது வழியில் செயல்படும் முதல்வர் தளபதிஆகியோரும்தான் இதற்கான காரணகர்த்தா ஆவார்கள். சிவகங்கை மாவட்டம் பின்தங்கிய. மாவட்டம் என்ற ஒரு அடைமொழி உண்டு. அதையெல்லாம் நீக்கி கல்வித்துறையில் நாம் சாதித்து வருகிறோம். சென்ற ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் மாநிலத்தில் ஆறாவது இடத்தில் இருந்தோம். தற்போது ஆறாவது இடத்திலிருந்து இரண்டாவது இடத்தையும், பிளஸ் டூ தேர்விலும் இரண்டாவது இடத்தினை பெற்றுள்ளோம். இந்த வெற்றிக்காக பாடுபட்ட தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மாவட்ட நிர்வாகம் உட்பட அனைவரையும் நான் தமிழக முதல்வர் சார்பில் பாராட்டினை தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த ஆண்டு பத்தாம் வகுப்பு பள்ளியில் முதல் இடம் பெற்ற ஆறு மாணவிகளுக்கு எனது சார்பில் தலா ரூ. 25 ஆயிரம் வீதம் ரூ. 1.50 லட்சமும்,பிளஸ் 2 தேர்வில் ஒன்று முதல் மூன்று இடம் பிடித்த மாணவிகளுக்கு தலா ரூ.25000 வீதம் ரூ. 75ஆயிரமும், நீட் தேர்வில் முதலிடம் பிடித்த மூன்று மாணவர்களுக்கு ரூ.25ஆயிரம் வீதம் ரூ.75 ஆயிரம் மானாமரையில் மருத்துவத் துறையில் துணை படிப்பினை தொடர்வதற்காக துவார் தொழிலதிபர் சந்திரசேகர் மூலம் ரூ.2 லட்சம் ஆக மொத்தம் ரூ. 5லட்சம் நிதி வழங்கப்படுகிறது. மருத்துவ துணை படிப்பிற்காக ரூ.2லட்சம் நிதி உதவி செய்த தொழிலதிபர் துவார் சந்திரசேகரனைபாராட்டுகிறேன். இந்த வெற்றி தொடர வேண்டும்.

நாம்வரும் கல்வி ஆண்டில் மாநிலத்தில் முதல் இடத்தை பெற வேண்டும். அதற்கான முயற்சிகளை இப்பொழுது.

முதல் தொடங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் பேசினார். நிகழ்ச்சியில் வரவேற்பு நடனம் ஆடிய சகாயராணி பள்ளி மாணவிகளுக்கு அமைச்சர் பெரிய கருப்பன் ரூபாய்10 ஆயிரம் நிதி வழங்கி பாராட்டினார்.

இந்த நிகழ்ச்சியில் சுமார் ஆறு மணி நேரம் 3997 தலைமை ஆசிரியர்கள் பாட ஆசிரியர்களுக்கு சான்றிதழ்களையும் கேடயத்தையும் நின்று கொண்டே அமைச்சர் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் புனித மைக்கேல் கல்வி நிறுவனங்களின் தாளாளர் எம்.ஸ்டாலின் ஆரோக்கியராஜ், வாழ்த்துரை வழங்கினார். மாவட்ட கல்வி அலுவலர் மீ.உதய குமார் நன்றி கூறினார்.

இந்தநிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன், திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கை மாறன், புனித மைக்கேல் கல்லூரி சி.இ.ஓ. திருமதி பிரிட்ஜிட் நிர்மலா, காரைக்குடி துணை மேயர் என். குணசேகரன்,

ஊராட்சி மன்ற தலைவர் திருமதிஜோஸ்பின் மேரிஅருள் ராஜ், விஸ்வநாதன், மாவட்ட கல்வி அலுவலர்கள் சே.மாரிமுத்து, பொன். விஜய சரவணா குமார், சீ.க.செந்தில்குமரன், ஒன்றிய கழக செயலாளர்கள் வே.ஆரோக்கிய சாமி, யோக. கிருஷ்ணகுமார்,

ஆர்.எம்.கென்னடி, வே.தமிழ். மாறன், நாகனி. ரவி, கணேசன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டுஅணி அமைப்பாளர் கே. எஸ். நாராயணன், தொழிலாளர் அணி தனசேகரன், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் சேவியர், ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார், ஓட்டுனர் சுரேஸ் உட்பட மாணவர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள். அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் சார்பில் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட 5000த்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்களுக்கு மதியம் அறுசுவை உணவும், இரவு சிற்றுண்டியும் வழங்கப்பட்டது.

### நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்

# மருத்துவப் படிப்பிற்கான 54வது பட்டமளிப்பு விழா!

## சட்டப்பேரவை தலைவர் மு. அப்பாவு பட்டங்களை வழங்கினார்!

நெல்லை, ஜூலை 5-

நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற மருத்துவ படிப்பிற்கான 54 வது பட்டமளிப்பு விழா மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்கள் மு.அப்துல் வகாப் (பாளை) ரூபி மனோகரன்(நாங்குநேரி) மாநகராட்சி துணை மேயர் கே. ஆர்.ராஜ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் ரேவதி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று 154 மருத்துவர்களுக்கு மருத்துவ படிப்பிற்கான பட்டங்களை வழங்கினார்.

பின்னர் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பேசியதாவது.

தமிழ்நாட்டில் மருத்துவத்துறையானது மிகச் சிறந்து விளங்குகிறது. பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, விருதுநகர், உள்ளிட்ட பகுதிகளில் உள்ள இருதய நோயாளிகளுக்கு சிறந்த அறுவை சிகிச்சையான இருதய அறுவை சிகிச்சை சிறப்பாக பெற்று வருகின்றனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மருத்துவக் கல்லூரி வர வேண்டும் என முதலில் அடித்தளமிட்டவர் கலைஞர் அவர்கள்.கலைஞர் அவர்களின் வழியில் முதலமைச்சர் அவர்கள் அனைத்துத்தரப்பட்ட ஏழை,எளிய, பொதுமக்கள் உயர்தர சிகிச்சை பெறும் வகையில் பல்வேறு புதிய மருத்துவக் கட்டிடங்கள் மருத்துவ சிகிச்சைக்கான உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தந்துள்ளார்கள்.

இக்கல்லூரியில் 2018 ஆம் ஆண்டு சேர்ந்து படித்து முடித்த 154 மருத்துவர்களுக்கு பட்டம் மற்றும் பதக்கங்களை வழங்கி பாராட்டுவதோடு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.மருத்துவம் படித்த நீங்கள் அனைவரும் பொதுமக்களின் நலன் கருதி சிறந்த சேவை செய்ய வேண்டும். உங்களின் சேவை தமிழ்நாட்டில் மற்றவர்களுக்கு முன் உதாரணமாக திகழ வேண்டும்.

இவ்வாறு பேரவை தலைவர் மு.அப்பாவு பேசினார்.

நிகழ்வில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கனகராஜ், மருத்துவக் கல்லூரி மருத்துவமனை துணை முதல்வர் சுரேஷ்,மருத்துவ கல்லூரி கண்காணிப்பாளர் பாலசுப்பிரமணியம்,மருத்துவர்கள் கலைவாணி,இந்திரா பிரியதர்ஷினி, ரவீந்திரன், மோகன், சித்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சித்திக்,ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி உள்பட மருத்துவர்கள், மருத்துவ மாணவர்கள், கழகத்தினர்,பெற்றோர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று முன்தினம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி மேம்பாடு தொடர்பாக குந்தா வட்டம் பென்ஸ்டாக் காட்சி முனைப் பகுதியில் ஆய்வு மேற்கொண்டார்.

# தஞ்சாவூர் - சென்னை புதிய தினசரி இரயில் இயக்குவீர்!

## இரயில்வே வாரியத் தலைவரிடம் தஞ்சை நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர் ச.முரசொலி எம்.பி. கோரிக்கை!

தஞ்சாவூர், ஜூலை 5-

தஞ்சாவூர் பகுதிக்கு பல்வேறு இரயில்வே பணிகளை செய்ய புது தில்லியில் இரயில்வே வாரியத்தலைவரை தஞ்சைநாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி நேரில் சந்தித்து கோரிக்கை வைத்தார்.

புது டெல்லியில் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி ரயில்வே வாரிய தலைவர் ஜெயா வர்மா சின்ஹாவை நேரில் சந்தித்து தஞ்சாவூர் - சென்னை இடையே புதிய தினசரி இரயில் இயக்கவும், திருச்சி, திருவனந்தபுரம், திருச்சி - ஹௌரா மற்றும் திருச்சி - பாலக்காடு ஆகிய விரைவு வண்டிகளை தஞ்சாவூர் வரை நீட்டிப்பு செய்யவும், தாம்பரம் - செங்கோட்டை மற்றும் செகந்திராபாத்- இராமநாதபுரம் விரைவு வண்டிகளை பேராவூரணி மற்றும் அதிராம் பட்டினத்தில் நின்று செல்லவும், செந்தூர்விரைவு வண்டி



இரு திசைகளிலும் பூதலூர் ரயில் நிலையத்தில் நிற்கவும், 1.அரியலூர் தஞ்சாவூர் பட்டுக் கோட்டை, 2. மன்னார்குடி பட்டுக் கோட்டை மற்றும் 3.தஞ்சாவூர் புதுக் கோட்டை ஆகிய மூன்று புதிய ரயில்வே வழிதடங்களை உடனடியாக அமைக்கவும்

மேலும் சென்னை எக்மோர்-காரைக்குடி இடையிலான கம்பன் விரைவு வண்டியை மீண்டும் இயக்குவதற்கும் தாம்பரம்-செங்கோட்டை விரைவு வண்டியை வாரம் 7 நாட்கள் இயக்கவும் கோரிக்கை வைத்தார்.




நடைபெற இருக்கின்ற விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராம தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் கழக தேர்தல் பணிக்குழு தலைவர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி காணை ஊராட்சி ஒன்றியம் ஆரியூர் கிராமத்தில் பொதுமக்கள் மத்தியில் வாக்குச் சேகரித்தார்

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இராசிபுரம் கே. இராமசாமி

**ஜூலை 5 (2000)**



சேலம் மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவராகவும், திராவிட இயக்கத்தின ஆரம்ப கால உறுப்பினராகவும் இருந்தவர்.

இராசிபுரம் ஒன்றியம், நாமகிரிப்பேட்டை ஒன்றியம் என இரு ஒன்றியங்களில் செயலாளராக இருந்தவர். பேரூர்க் கழகச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

இராசிபுரம் கூட்டுறவு நிலவள வங்கித் தலைவராகவும், தமிழ்நாடு மாநில நிலவள வங்கி இயக்குனநராகவும் பொறுப்பு வகித்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களால் 1999ஆம் ஆண்டு “மாநில சிறந்த கூட்டுறவாளர்” விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**